UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்க கால ஊர்களின் அமைப்பும் சிறப்பும்

**முனைவர் கோ. இரவிச்சந்திரன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ கிருஷ்ணா ஆதித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

பழந்தமிழர்கள் தொடக்க காலத்தில் நாடோடிகளாக வாழ்ந்தனர். மலைகளிலும் காடுகளிலும் வாழ்ந்தவர் பின்பு நிலையாக ஆற்றங்கரையோரம் நிலையாக குடிபுகுந்தனர். அதன் பின்னர் நாகரிக வாழ்வை மேற்கொண்டனர். பண்டைய வரலாற்றை உணர மன்னர்களின் ஆட்சி, வாழும் வாழ்க்கை, பண்பாடு போன்று மக்கள் வாழ்ந்த ஊர்ப்பெயர்களும் இன்றிமையா மூலங்களாகின்றன. சங்கப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் பதிவு செய்த ஊர்ப்பெயர்கள் சிலவற்றை முன்வைக்கிறது இக்கட்டுரை.

**முதன்மைச் சொற்கள்**

நில அடிப்படையில் ஊர்ப்பெயர்களான அட்டவாயில் – அரிமணவாயில் – அழும்பில் – ஆய்குடி – கழுமலம் – கானப்பேர் ஆகியன சிறப்பிடம் பெறுகின்றன.

பழந்தமிழர்கள் மலைகளிலும் காடுகளிலும் அலைந்து திரிந்து நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். காலப்போக்கில் ஆற்றங்கரையோரத்தில் நிலையான வாழ்வை மேற்கொண்டு படிப்படியான நாகரிக வளர்ச்சிக் கூறுகளைப் பெருக்கத் தொடங்கினார்கள். மனித இனம் ஓரிடத்தில் நிலைத்து வாழத் தொடங்கிய காலத்திலேயே இடப்பெயர்களும் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

பண்டைய வரலாற்றை அறிய மன்னர்களின் ஆட்சி, வாழும் முறைகள், பண்பாடு, கலாச்சாரம் போன்று மக்கள் வாழ்ந்த ஊர்ப் பெயர்கள் இன்றியமையாத மூலங்களாகின்றன. மக்கள் தங்களை அடையாளப்படுத்த தமது ஊர்ப்பெயரைப் பயன்படுத்தியுள்ளனர். இம்முறை தொன்று தொட்டு வழங்கியுள்ளமையைச் சங்ககால புலவர்கள் தம் பெயர்முன் ஊர்ப்பெயரை வைத்துள்ளமையைக் கொண்டு உய்த்துணர முடிகிறது. இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், அயல்நாட்டார் குறிப்புகள் போன்று இடப்பெயர், ஊர்ப்பெயர் ஆய்வுகளும் வரலாற்றை அறிய உதவும் சான்றாதாரங்களாக விளங்குகின்றன. எங்கு வரலாறு மௌனம் சாதிக்கத் தொடங்குகிறதோ அங்கே இடப்பெயர்களும் ஊர்ப்பெயர்களும் தம் வாய்திறந்து பேசத் தொடங்கும் என்று அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். அப்போக்கில் சங்கப் புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் பதிவு செய்த ஊர்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**நில அடிப்படையில் ஊர்ப்பெயர்கள்**

சங்கப் பாடல்களில் புலவர்கள் ஊர்ப்பெயர்களின் பொருள் விளங்குமாறு நேர்முகமாகவும்

மறைமுகமாகவும் பாடியுள்ளனர். தொல்காப்பியர் மக்கள் வாழும் இடத்தை ஊர் என்றே குறித்துள்ளார். சங்க கால மக்கள் தாம் வாழும் நிலப்பகுதிக்கு ஏற்ப சிறுகுடி, பள்ளி, பாடி, சேரி, பட்டினம், பாக்கம், பறந்தலை எனப் பெயரிட்டனர்.

ஊருக்கு வழங்கும் பெயர்களாகச் சேந்தன் திவாகரம்,

**"பாக்கம் பட்டினம் பதி நகர் சும்மை**
**பக்கம் சேரி புரம் முட்டம் பூண்டி**
**அகரம் குடியே குறிச்சி கோசரம்**
**அகலுள் நொச்சி இருக்கை வேலி**
**குப்பம் பாடி குறும்பு பாழி**
**சிறுகுடி தண்ணடை உறையுள் எயிலொடு**
**வாழ்க்கை யுட்படுத் திருபத்தேழும்**
**நாடிலூ ரென நவின்றிசி னோரே"**

எனக் குறிப்பிடுகிறது.

"சங்க இலக்கியங்களில் மொத்தம் 243 **ஊர்கள் இடம் பெற்றுள்ளன. ஊர்ப் பெயர் களின் அமைப்பு முறையை நோக்கும் போது அவை இருவேறு தனிக்கூறுகளைக் கொண்டுள்ளன. ஊர்ப் பெயரின் ஈற்றில் விகுதியாக அமைந்திருக்கும் கூறு பொதுக் கூறு என்றும் அவ்வூர்களின் இடையில் வேறுபாடு தோன்றுவதற்காக முற்பகுதியில் சேர்க்கப்பட்ட கூறு சிறப்புக்கூறு என்றும் குறிப்பிடப்படும். ஆகவே பொதுக்கூறு, சிறப்புக்கூறு எனும் இரு தனிக் கூறுகளைக் கொண்டதாக ஊர்ப்பெயர்கள் அமைந்தன"**[1] என்று விளக்குகிறார் ஆர். ஆளவந்தார். இருப்பினும் பொதுக்கூறு, சிறப்புக்கூறு இல்லாத ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என்ற கருத்தும் நிலவுகிறது.

### அட்டவாயில்

போரிட்டு அழிக்கப்பட்ட வாயில் அட்ட வாயில். அட்டு–ஆடு-ஆடனை என மருவித் தற்போது திருவாடனை எனும் ஊராகத் திகழ்கிறது. இவ்வூர் இராமநாதபுரம் மாவட்ட த்தில் அமைந்துள்ளது. சங்க காலத்தில் நீண்ட கொடிகள் அசையும் தன்மையதாய் அட்டவாயில் விளங்கியது. இவ்வூர் செல்வர் களின் விரைந்து செல்லும் தேரானது சென்ற படியே இருக்கும். நீண்ட கதிர்களுடைய வயல்களைக் கொண்டு அழகுமிகுந்து காணப்படும். இதனை,

**"செல்வர்**
**கடுந்தேர் குழிந்த நெள்ளல் ஆங்கண்**
**நெடுங்கொடி நுடங்கும் அட்டவாயில்"**[2]

என்ற பாடலடிகள் பறைசாற்றுகின்றது.

### அரிமணவாயில்

கள்ளின் மணம் செறிந்த ஊர். இவ்வூரினை உறத்தூர் என்றும் கூறுவர். அரிமணவாயில் இன்றைய புதுக்கோட்டைக்கு அருகில் அரிமளம் எனும் ஊராகத் திகழ்கிறது. நீடூரின் தலைவனான எவ்வி தனது பகைவர்களுடன் போரிட்டு வென்ற இடம் அரிமணவாயில். இங்குத் தன் வீரர்களுக்குக் கள்ளுடன் பெருஞ்சோற்றைப் பகல் பொழுதில் அளித்தான். அச்சமயத்தில் எழுந்த ஆரவாரம் வானை முட்டியது.

**நீடூர் கிழவோன்**
**வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்**
**நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பெருந்தலர்**
**அரிமணவாயில் உறத்தூர் ஆங்கண்**
**கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்லுமிழ்"**[3]

என்று பரணர் பாடி பெருமிதம் கொள்கிறார்.

### அழும்பில்

அழும்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் அம்புக்கோயில் என வழங்கப்படுகிறது.

**இவ்வூரில் எழுந்த சிவன் கோயில் அழும்பிற் கோயில் என வழங்கலாயிற்று. அழும்பிற் கோயில் அம்புக்கோயில் என மருவிற்று. நாளடைவில் கோயில் பெயரே ஊர்ப் பெயராயிற்று**[4] என்கிறார் ரா.பி.சேதுப்பிள்ளை.

அழும்பில் மானவிறல் வேள் என்ற குறுநில மன்னனுக்குரியதாக விளங்கியதை மதுரைக் காஞ்சி கூறுகிறது. அவனுக்குப் பிறகு பெரும்பூண் சென்னிக்கு உரியதாயிற்று. இதனை, **"பிணையலங்கண்ணி பெரும்பூட் சென்னி அழும்பில்"**(அகம்.44) என வரும் பாடலடியால் உணரலாம். இவ்வூர் குளிர்ந்த நீர்நிலையில் காணப்படும். செங்குரலிக் கொடி நிறைந்து காணப்படும். நீர்நாய் வாளைமீனை உண்ணும். பாம்புகள் வாளைமீன் என நினைத்து முதலை உண்ணும் போன்ற செய்திகள் சங்க பாடல்கள் வழி அறியலாம்.

### ஆய்குடி

ஆய்குலத் தலைவனான ஆய் ஆண்டிரனின் ஊர் ஆய்குடியாகும். ஆயர்குடி என்பதே ஆய்குடி என மருவி இருக்கலாம் என்பர். இவ்வூர் பொதிய மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இந்த ஆய்குடி இமயத்திற்கு ஒப்பானது என்றும் தெற்கில் இவ்வூர் இல்லையெனில் உலகம் பிறழ்ந்து விடும் என்றும் ஏணிச்சேரி முடமோசியார் பாடியுள்ளார். இதனை,

**தென்திசை ஆய்குடி இன்றாயின்**

**பிறழ்வா மன்னோ இம்மலர்தலை உலகே"**[5]

என்னும் பாடல் உணர்த்துகிறது.

**கழுமலம்**

கழுமலம் இன்று சீர்காழி என வழங்கப் படுகிறது. இவ்வூர் தேவார காலத்தில் காழி என்ற பெயரில் அழைக்கப்பட்டது. பதிகம் பாடிய சிறப்பால் சீர்காழி என வளர்ச்சி யடைந்தது. கரிகாலனை அரசனாகத் தேர்ந் தெடுத்த யானையைக் கழுமலத்திலிருந்து அனுப்பினர் என பழமொழி நானூறு பகர்கிறது. இவ்வூர் புகாருக்கு அருகில் இருப்பதால் சோழ நாட்டு ஊர் என்பர். பின்பு சேரர் கைப்பற்றித் தன்கீழ் கொண்டு வந்தனர். எனவே குட்டுவனின் கழுமலம் என அழைக்கப்பட்டதை

**நல்தேர்க் குட்டுவன் கழுமலத் தன்ன**

(அகம் 270) பாடலடி விளக்குகிறது.

**கானப்பேர்**

கானப்பேர், வேங்கை மார்பன் எனும் குறுநில மன்னனின் ஊராகும். இவ்வூர் பாதாளத்தைத் தொடுமளவு ஆழ்ந்த அகழியையும் வானைப் போன்ற உயர்ந்த மதிலையும் வானத்து மீன்கள் போன்ற சூட்டினையும் வெயில் நுழைய இயலாத அடர்ந்த காவற்காட்டையும் கொண்டு விளங்கியதைப் புறப்பாடல் விளக்குகிறது.

**"இது கானப்பேரெயில் எனவும் அழைக்கப் பட்டது. சிவகங்கைக்கு அருகில் அமைந்துள்ள காளையார் கோயில் தான் சங்ககாலக் கானப்பேர் ஆகும். "கானப்பேர் உறை காளை" எனச் சுந்தரர் தான் பாடிய தேவாரப் பாடலில் இறைவனை அழைத்தார். அதனால் காளையார் எழுந்தருளும் கோயில் காளையார் கோயிலாயிற்று. கோயில் பெயரே நாளடைவில் ஊர்ப்பெயராகவும் கொள்ளப் பட்டது"**[6] என்று ரா.பி.சேதுப்பிள்ளை கூறுவது ஈண்டு எண்ணத்தக்கது.

**தொகுப்புரை**

பழங்காலத் தமிழர்கள் தமது ஊர்களுக்கு நில அடிப்படையில் இயற்கை, குடியிருப்பு சார்ந்தும் பெயரிட்டனர். இவை பொதுக்கூறு, சிறப்புக் கூறுகளைப் பெற்றுள்ளதை அறியமுடிகிறது. ஊர்ப் பெயர்கள் சில தன் பழமையைத் தக்க வைத்துள்ளன. சில ஊர்ப்பெயர்கள் மருவியும் சற்று திரிந்தும் வழங்கப்படுகின்றன. சில ஊர்கள் முற்றிலும் வேற வடிவம் பெற்றுள்ளதையும் காண முடிகிறது. மூவேந்தர்களின் கீழ் படைத் தளபதிகளாகப் பணியாற்றுபவரே ஊரை ஆளும் தலைவர்களாக உள்ளதைச் சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. ஊர்ப் பெயர்கள் சில தலைவியின் அழகுக்கு உவமையாகச் சொல்லப்படும் வகையில் இடம் பெறுகின்றன. சில ஊர்கள் சிற்றரசர் களோடு தொடர்புடையதாக உள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. ஆர்.ஆளவந்தார் – இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள் – ப.51.
2. அகம்; 326
3. அகம்; 266
4. ரா.பி.சேதுப்பிள்ளை-தமிழகஊரும்பேரும் ப.235
5. புறம்; 132
6. ரா.பி.சேதுப்பிள்ளை-தமிழகஊரும்பேரும் ப.30.

**துணை நூற்பட்டியல்**

1. ஆளவந்தார். ஆர், இலக்கியத்தில் ஊர்ப் பெயர்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600113, ஏப்ரல் – 1984.
2. புலியூர்க் கேசிகன், சங்க இலக்கியம், எட்டுத்தொகை,(உரையாசிரியர்) அகநானூறு சாரதா பதிப்பகம், சென்னை– 600014, முதற்பதிப்பு – ஜீ ன் 2010
3. சேதுப்பிள்ளை ரா.பி., தமிழர்தம் ஊரும் பேரும், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை – 14, நான்காம் பதிப்பு – 1968.
4. புலியூர்க் கேசிகன், சங்க இலக்கியம், எட்டுத்தொகை,(உரையாசிரியர்), புறநானூறு, சாரதா பதிப்பகம், சென்னை –600014, முதற்பதிப்பு–ஜீ ன் 2010